# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



அனுப்புநர் :
திரு. கி.சந்திரசேகர், B.E., MTP.
துணை இயக்குநர் (பொ) / உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
124, ஜி.எஸ்.டி. ரோடு, நகராட்சி வணிக வளாகம்,
செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு 1.
Email : ddcglregion@gmail.com

பெறுநர் :
தனி அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
அடையாளச்சேரி ஊராட்சி,
லத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
செய்யூர் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

**ந.க.எண்.86/2020/செமா3 நாள்: 09 .10.2020**

அய்யா,

பொருள் : **குடியிருப்பு மனைப்பிரிவு** - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் செங்கல்பட்டு மாவட்டம். செங்கல்பட்டு - செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், இலத்தூர் ஊராட்சி ஒன்றியம், அடையாளச்சேரி ஊராட்சி, பரமேஸ்வரமங்கலம் கிராமம், சர்வே எண்: 432/1A1-ல் பரப்பு **0.405 ஹெக்டேர்** இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1. மனுதாரர் M/s. ஸ்ரீ பிரம்மசக்தி பிரப்பர்டீஸ் டெவலப்பர்ஸ் திரு. M.N. பழனி அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள் : 06.01.2020

2. வேளாண் இணை இயக்குநர், காஞ்சிபுரம் அவர்களின் தடையின்மைச் சான்று கடிதம் எண்: 4579/2019/இ7 நாள்:18.06.2019
3. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 14619/88/பிசி நாள் : 27.04.1988
4. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 40483/1990/எல்ஏ1 நாள் : 7.11.1992
5. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 16985/2000/எல்ஏ2 நாள் : 29.09.2007
6. அரசாணை எண். 71, ஊரக வளர்ச்சித் துறை நாள் : 16.06.2003
7. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை நாள்:4.6.04
8. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12544/14/பி1, நாள் : 04.07.14.
9. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 16091/2016/MP1 நாள் . 11.05.17
10. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 13686/2017/எல்ஏ1 நாள் : 08.09.17
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 7978/2012/எல்ஏ2, நாள் :19.04.12
12. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12201/2017/பி1, நாள்.22.09.2017.
13. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019 மற்றும் அரசாணை (நிலை) எண்.16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
14. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்: 23.03.2020 (சாலை ஒப்படைக்க கோரியது மற்றும் மின்சார வாரியத்திற்கு முகவரியிட்ட கடிதம்)
15. மனுதாரர் M/s. ஸ்ரீ பிரம்மசக்தி பிராப்பர்டீஸ் டெவலப்பர்ஸ் திரு. M.N. பழனி அவர்களின் கடிதம் (தனி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), இலத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1580/2020/ஆ3 நாள்:04.09.2020 (தானப்பத்திர எண்.1540/2020 நாள்:24.08.2020 தீர்மானம் எண். 8 நாள் : 14.08.2020

For SREE BRAMMASAKTHI PROPERTY
DEVELOPERS
M-N-Palani
Partner

16. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.29.09.2020 (நன்னிலை வரி OSR Guideline Value கட்டணம் மற்றும் Display Board Deposit செலுத்தக் கோரப்பட்டது.)

17. மனுதாரர் M/s. ஸ்ரீ பிரம்மசக்தி பிரப்பர்டீஸ் டெவலப்பர்ஸ் திரு. M.N. பழனி அவர்களின் கடிதம், நாள்:30.09.2020. (நன்னிலை வரி மற்றும் OSR Guideline Value கட்டணம் செலுத்தப்பட்ட நாள் 30.09.2020

18. அரசாணை எண்.79. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. ந.வ.4(3) நாள்.04.05.2017

19. சார்பதிவாளர், செய்யூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 84/2020 நாள் : 06.06.2020

20. நகர் ஊரமைப்பு ஆணையர் சுற்றறிக்கை கடிதம் எண். 9860/10/முதி1 நாள் : 20.9.16-ன்படி Online Application No: 202000201010041 dt.03.01.2020

**************

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், இலத்தூர் ஊராட்சி ஒன்றியம், அடையாளச்சேரி ஊராட்சி, பரமேஸ்வரமங்கலம் கிராமம், சர்வே எண்: 432/1A1-ல் பரப்பு **0.405 ஹெக்டேர்** இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு பார்வை(1)-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

1. இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட உத்தேச மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ./ந.ஊ.து.இ(செமா.)எண்.142/2020** என எண்ணிடப்பட்டு இரண்டு வரைபடங்கள் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

2. மேலும் பார்வை 3 முதல் 13-ல் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. பார்வை(6)-ல் கண்டுள்ள அரசாணையின்படி சாலையை மனுதாரரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெற்றும், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து மனைப்பிரிவு முழுமையாக அபிவிருத்தி செய்து அதனை உள்ளாட்சிக்கு ஒப்படைத்த பின்னரும், மேலும் மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19(இ), 19(உ)குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4. மனைப்பிரிவிற்கு ஊராட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண். 19(அ)ன்படி இவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. "The Land ownership is the responsibility of the Local Authority, as per the G.O. Ms. No. 71 RDLA dated 16.06.2003 and this Technical approval for the layout is accorded based on the Land Ownership Certificate furnished by the Executive Authority.

6. பார்வை(14)-ல் கண்ட கடிதம் மூலம் பெறப்பட்ட இணைப்புகளில் உள்ளவாறு **உள்ளாட்சிக்கு** தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்த்துறை, சர்வே எண். உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

For SREE BRAMMASAKTHI PROPERTY DEVELOPERS
M. N. Palani
Partner

7. பார்வை(17)-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் Scrutiny Fee ரூ.6,075/- ; நன்னிலை வரி ரூ.9000/ OSR Guideline Value கட்டணம் ரூ.20,875/-மற்றும் Display Board கட்டணம் ரூ.10,000/ செலுத்தப்பட்டதற்கான விபரம் பெறப்பட்டுள்ளது.

8. உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலையை ஊராட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை சம்மந்தப்பட்ட தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்த தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

## சிறப்பு நிபந்தனைகள் :

1. மனைப்பிரிவு உத்தேசத்திற்கு சாக்கடை வடிகால் வசதி மற்றும் தெரு மின்விளக்கு வசதிகள் அமைப்பதற்கு உள்ளாட்சியால் உரிய கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் அல்லது அமைக்கப்பட்டிருக்கிறதா என உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

2. பார்வை(8)-ல் காட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/14/சிபி, நாள்:04.07.14ன்படி "நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரப் பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

2. பார்வை(12)-ல் காட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12201/2017/சிபி, நாள்.22.09.2017. ன்படி The Tamilnadu Government in G.O. (Ms) No. 112, H & UD (UD4(3)), Department, dated : 22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any matter any plot, apartment or building, as in the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority.

For SREE BRAMMASAKTHI PROPERTY
DEVELOPERS
M. N. Palani
Partner

3. பார்வை(18)-ல் காணும் அரசாணை (Ms) எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள் : 04.5.2017-ல்

a. இனம் 3-ன்படி மேற்படி மனைக்கு ரூ.1000/ கூராய்வு கட்டணமாக பெறப்பட வேண்டும்.

b. இனம் (9)-ன்படி "use conversion charge at the rate of 3% of the market value fixed under section 47-AA of the Indian Stamp Act, 1899 (Central Act 2 of 1899) and deposit the amount in Government head of account and grant permission carrying out the development" என தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி மனைப்பிரிவின் பரப்பிற்கு சந்தை மதிப்பீட்டின்படி (market value of land) 3% தொகையினை அரசுக் கணக்கில் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**Head of Account :**

"0217 Urban Development - 60 other Urban Development Schemes - 800 other Receipts - AS Receipts under Land Use Conversion Charges-27" Non Taxation fees - 09 Collections (DPC : 0217-60-800-AS 2790)"

9.10.20

துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு.

9.10.2020

இணைப்பு : மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் (இரண்டு நகல்கள்)

நகல் : 1. திரு. M.N. பழனி,
பங்குதாரர்,
M/s. ஸ்ரீ பிரம்மசக்தி பிராப்பர்டீஸ் டெவலப்பர்ஸ்,
பழைய எண். 1/221, புதிய எண். 5/469,
அப்பர் தெரு, மேடவாக்கம்,
சென்னை - 600 100.

2. நகர் ஊரமைப்பு இயக்குநர்,
807, அண்ணா சாலை,
சென்னை 02. அவர்களுக்கு மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகளுடன் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3. மாவட்ட நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், செங்கல்பட்டு மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

For SREE BRAMMASAKTHI PROPERTY DEVELOPERS
M. N. Palani
Partner

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு.

கோப்பு எண். **86/2020** செமா.3 அடையாளச்சேரி ஊராட்சி

## மனைப்பிரிவு நிபந்தனைகள்

1) அ. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ/ந.ஊ.து.இ.(செமா) எண்.**142/2020** என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக் கற்கள் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் ஊராட்சி கட்டிட விதிகள் 3(5)ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரரால் நிர்வாக அதிகாரியால் (Executive Authority) நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும்.

ஆ. அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால் துப்புரவு வசதி தெருவிளக்கு ஆகிய வசதிகள் நிர்வாக அதிகாரியின் கருத்திற்கேற்ப மனுதாரர் அமைத்து தர வேண்டும்.

இ. நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதல் இன்றி செய்தல் கூடாது.

ஈ. அங்கீகரிக்கப்பட்ட இம் மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / உரிமையாளர் முறையாக அமைத்து அல்லது அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி சம்மந்தப்பட்ட ஊராட்சி மன்றத்திற்கு உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச் சாலையாக பராமரிக்க தலைவருக்கு தானமாக ஒப்படைக்க வேண்டும்.

உ. மேற்படி சாலைகளை பொதுச்சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு கட்டணத் தொகையை பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாரரின் கையொப்பம் பெறப்பட வேண்டும்.

2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

5) விரிவு அபிவிருத்தித் திட்ட பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒரு பக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது.

For SREE BRAMMASAKTHI PROPERTY
DEVELOPERS
M - N. Palani
Partner

6) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 9மீ வரை உள்ள சாலைக்கு 1.5மீ கட்டிட வரம்பும், 9 மீ முதல் 18மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3மீ கட்டிட வரம்பும், 18 மீ முதல் 30.5மீ வரை உள்ள அகல சாலைகளுக்கு 4.5மீ கட்டிட வரம்பும், 30.5மீ அகலத்திற்கு மேல் உள்ள சாலைகளுக்கு 6.0மீ கட்டிட வரம்பும் என்ற அளவில் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டிட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலருந்து 1.8மீ (6 அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளின்படி 2.4மீ (8.0) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டிடமோ சுவரோ கட்டுதல் கூடாது.

7) மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5மீ அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3மீ திறவெளி விடப்பட வேண்டும். 10மீ வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத்திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5மீ விடப்பட வேண்டும்.

8) ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3மீ அளவுகள் திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்தப் பின்பக்கத் திறவெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத்தொழுவம், உந்துவண்டி நிறுத்தம், கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லது ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3மீ / 3.75மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

9) விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டிடம் கட்டப்படக் கூடாது. கட்டிடம் விடப்படும் திறந்தவெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ தூய்மையாக பராமரித்தல் வேண்டும்.

10) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

11) கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ நிலச்சரிவை சரி செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்துதலோ கூடாது.

12) 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்தது 9மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

13) மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்பாக தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), இலத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஊராட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

14) மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

15) கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். இவைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

For SREE BRAMMASAKTHI PROPERTY DEVELOPERS

Partner

16) பூங்கா, சிறுவர் விளையாட்டிடம் திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்க வேண்டும்.

17) மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப்பாதை அமைந்தால் கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றியமைக்க வேண்டும்.

18) மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலம் ஊராட்சி மன்றத் தலைவர் உடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துக்கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்படுத்தான் செய்யப்பட வேண்டும். மேற்படி மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

19) அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில்நுட்ப ஒப்புதல் (Technical Apprvoval) மட்டுமே வழங்கப்பட்டு உள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. தமிழ்நாடு நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விவரத்தினை தொடர்புடைய உச்ச வரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

இ. மனைப்பிரிவு இடம் 1984-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப் பிரிவு 4(1)ன்படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி பரிசீலனை செய்த பின்னரும் நில உச்ச வரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்த்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்காக தலைவர் மனநிறைவு அடைந்த பின்னரேதான் மனைப்பிரிவிற்கு ஊராட்சியில் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஈ. மேற்படி மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்.

உ. மேலும் மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதம் பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதனையும் மனநிறைவு அடைந்த பின்னர் தான் மனைப்பிரிவிற்கு ஊராட்சி மன்றத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

20) மனுதாரர் தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), இலத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களிடமிருந்து வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும், நாளும் மன்றத்திற்கும், மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

21) தமிழ்நாடு வீட்டு வசதி மனைப்பிரிவு மனையின் பரப்பு 110சதுர மீட்டருக்கு குறைவாக இருந்தால் கட்டிட விதிகள் மட்டுமே பொருந்தும்.

22) நிலவங்கி என்று ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை அரசாணை எண்.139, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.14.09.93ன்படி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டும்.

For SREE BRAMMASAKTHI PROPERTY DEVELOPERS

M. N. Palani

Partner

23) மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில், நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

24) நில உரிமை குறித்த வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்

25) இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொது மக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6அடி x 4அடி என்ற அளவுக்கு குறையாமல் காட்சிப் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

26) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் மனைப்பிரிவு வரைபடம் நகல் வழங்கப்பட வேண்டும்.

27) EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஆகும். இம்மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விவரம்

| | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | | 0.405 ஹெக்டேர் (அ) 4050 ச.மீ | – |
| ஒதுக்கிய மனைகள் | | 29 | |
| உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பகுதி: | | | |
| பொது உபயோகம் | - | 176.00 ச.அடி | 0.56% |
| தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது : | | | |
| தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு ஒப்படைக்கப்பட்டது | - | 313.00 ச.அடி | 1.00% |
| மனுதாரர் விற்பனைக்குரியது : | | | |
| கடை | - | 492.00 ச.அடி | 1.12% |

9.10.20

துணை இயக்குநர் (பொ).
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு.

9.10.2020

For SREE BRAMMASAKTHI PROPERTY DEVELOPERS
M.N. Palani
Partner

## தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), இலத்தூர் அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை - திரு.மு.ஜெயபால்,

ந.க.எண்.1580/2020/ஆ3. நாள். 21.10.2020.

பொருள் - மனைப்பிரிவு - இலத்தூர் ஊராட்சி ஒன்றியம் - அடையாளச்சேரி ஊராட்சி சர்வே எண்-432/1A1-ல் பரப்பு 0.40.5 ஹெக்டேர் (அ) 4050 ச.மீ (அ) 43594.2 ச.அடி இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு முறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் - சார்ந்து

பார்வை - 1.அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை, ந.வ.4(3). நாள்.04.05.2017.
2. அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சி துறை நாள்.16.06.2003.
3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் கடித ந.க.எண்.86/2020/செமா3 நாள்.09.10.2020.
4. தானப்பத்திர ஆவண எண்.1540/2020. நாள்.24.08.2020.
5. அடையாளச்சேரி ஊராட்சி மன்றத் தீர்மான எண்.11 நாள்.20.10.2020.

*********

உத்தரவு -

செங்கல்பட்டு மாவட்டம், இலத்தூர் ஊராட்சி ஒன்றியம், அடையாளச்சேரி ஊராட்சி சர்வே எண்-432/1A1-ல் பரப்பு 0.40.5 ஹெக்டேர் (அ) 4050 ச.மீ (அ) 43594.2 ச.அடி இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் பார்வை 3-ல் காணும் கடித வாயிலாக ம.வ./ந.ஊ.து.இ(செ.மா) எண்.142/2020 எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### கணக்கீட்டு விவரம்

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த நிலப்பரப்பு 0.40.5 ஹெக்டேர் | 4050 ச.மீ (அ) 43594.2 ச.அடி |
| ஊராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட விவரம் (சாலை பரப்பு - 12414 சதுர அடி, மூலை முடக்கு - 100 சதுர அடி, பொது உபயோகம் பகுதி -176 ச.அடி மற்றும் த.நா.மி.வாரியத்திற்கு ஒப்படைக்கப்படவேண்டியபகுதி - 313 ச.அடிஆக மொத்தம் (13003சதுரஅடி) தானபத்திரம் எண்.1540/2020 நாள்.24.08.2020 | (-)13003 சதுர அடி |
| மனைகளின் பரப்பு நிகரம் | 30591.2 சதுர அடி |

### கட்டண விவரம்

| | |
|---|---|
| பார்வை 1-ல் காணும் அரசாணை இனம் 9-ன்படி அனுமதி கட்டணம் (சந்தைமதிப்பு 1 சதுர அடிக்கு ரூ.100/- வீதம் 30591.2 சதுர அடி பரப்பளவுக்கு (ரூ.100X 30591.2 சதுர அடி) மொத்த தொகை ரூ.30,59,120/-க்கான 3% தொகை | ரூ.91,774/- |
| கூராய்வு கட்டணம் | ரூ.1,000/- |
| மனைமிடஅனுமதி கட்டணம் ஒருஏக்கருக்கு ரூ.1000/- வீதம் 1 ஏக்கருக்கு ரூ.1000/- | ரூ.1,000/- |
| மொத்தம் | ரூ.93,774/- |

For SREE BRAMMASAKTHI PROPERTY DEVELOPERS
M - N · Palani
Partner

## கட்டண தொகை செலுத்தப்பட்ட விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | மனுதாரர் பெயர் | : | Mr.Palani / Nadarajan<br>M/s.Sree Bramma sakthi Property Developers |
| 2 | மனை அமைந்துள்ள ஊராட்சியின் பெயர் | : | அடையாளச்சேரி |
| 3 | சர்வே எண் | : | 432/1A1 |
| 4 | மனைகளின் எண்ணிக்கை | : | 29 |
| 5 | மனைகளின் பரப்பு | : | 30591.2 சதுரஅடி |
| 6 | பார்வை 1-ல் காணும் அரசாணை இனம் 9-ன்படி அனுமதி கட்டணம் (ம) கூராய்வு கட்டணம் | : | ரூ.91,774/-<br>செய்யூர், கனரா வங்கி செலான் நாள்.20.10.2020-ல் செலுத்தப்பட்டுள்ளது |
| 7 | மனைமிட அனுமதி கட்டணம் | : | ரூ.1,000/-<br>பல்வகை ரசீது எண்.2905 நாள்.20.10.2020-ல் ஊராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது. |

எனவே, மேற்கண்ட கட்டணங்கள் செலுத்தியதால் மேற்கண்ட மனைப்பிரிவுக்கு ஊராட்சி மன்ற தீர்மான அடிப்படையில் பார்வை 3-ல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ஊராட்சி அங்கீகாரம் அளித்து உத்தரவிடப்படுகிறது.

21-10-2020

தனிஅலுவலர், அடையாளச்சேரி ஊராட்சி/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
இலத்தூர் ஊராட்சிஒன்றியம்.

21/10/2020

பெறுநர்.

Mr.Palani / Nadarajan
M/s.Sree Bramma sakthi Property Developers,
Old No.1/221, New No.5/469,
Appar Street, Medavakkam,
Chennai – 600 100.

நகல் -ஊராட்சி செயலர், அடையாளச்சேரி ஊராட்சி, இலத்தூர் ஊராட்சி ஒன்றியம்.

For SREE BRAMMASAKTHI PROPERTY DEVELOPERS
M.N. Palani
Partner

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate